பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (09.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 313

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை கிழியுங்கள்!

# கண்காணிப்புக் குழுவை விரட்டுங்கள்!!

## தேசிய பிக்குகள் முன்னணி சீற்றம்

கொழும்பு, ஒக்ரோபர் 9

போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து எறியுங்கள். கண்காணிப்புக் குழுவினரை நாட்டிலிருந்து விரட்டுங்கள் - வெளியேற்றுங்கள்.

- இவ்வாறு தேசிய பிக்குகள் முன்னணி சீற்றத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாகவே கண்காணிப்புக்குழு அத்துமீறிச் செயற்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அண்மையில், ஐஸ்லாந்து இராஜதந்திரியை கண்காணிப்பு குழு அரசாங்கத்தின் அனுமதியின்றி வன்னிக்கு கூட்டிசென்ற விடயத்தை, முன்நிறுத்தி பாதுகாப்பு அமைச்சு செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும் எனக் கடிந்து அந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மூவர் சரணடைந்தனர்

யாழ்ப்பாணம், ஒக்.9

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இளைஞர்கள் மூவர் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

தும்பளை,பருத்தித்துறையைச் சேர்ந்த 38 வயதுடைய இளைஞர் ஒருவரும், மட்டுவிலைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரும், கரம்பொன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவருமே இவ்வாறு சரணடைந்தவர்கள் ஆவர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

(சி - 68)

## அம்பாறையில் நேற்று 2 இடங்களில் மோதல்கள்

அம்பாறை மாவட்டத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் மீது பக்கிமுட்டியா, கஞ்சிகுடிச்சாறு ஆகிய பகுதியில் தாம் இருதாக்குதல்களை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் பக்கிமுட்டியா, தமணப்பகுதியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படையினர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இரண்டு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

அதேவேளை - கஞ்சிகுடிச்சாறுப்பகுதி நோக்கி நேற்றுக்காலை 6.30 மணியளவில் கருணா குழுவினருடன் அதிரடிப்படையினர் நகர்ந்த போது, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதன்போது இரு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். 10 அதிரடிப் (8ஆம் பக்கம்

## மிருசுவிலில் ஊடுருவி புலிகள் தாக்குதல்; சிப்பாய் மரணம்!

கொழும்பு, ஒக்.9

மிருசுவில் பகுதிக்குள் நேற்று முன்தினம் காலை ஊடுருவி விடுதலைப்புலிகள் நடத்திய கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். படைத்தரப்பு இதனை அறிவித்துள்ளது.

படுகாயமடைந்த இந்த சிப்பாய் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்க பட்டு அங்கு மரணமானார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)

## அநாமதேயத் தொலைபேசி அழைப்பு வந்ததா? இலக்கத்தை இராணுவ முகாமில் ஒப்படையுங்கள்

### பாதுகாப்புத் தலைமையகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக.9

அநாமதேயத் தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் அந்தத் தொலைபேசி இலக்கங்களைக் குறித்துவைத்து அருகில்உள்ள இராணுவமுகாமில் ஒப்படைக்க வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு சட்டத்தின்முன்நிறுத்தி அவர்களுக்குத்தண்டனை வழங்கநடவடிக்கை எடுக்கப்படும்.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று விடுத்த அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலைக் கடற்கரையில் நேற்று பொலித்தீனில் சுற்றப்பட்ட சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.9

அரியாலை கடற்கரையில் அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் பொலித்தீன்பைகளால் பொதிசெய்யப்பட்ட நிலையில் நேற்றுப்பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

கடலில் பொதி ஒன்று மிதந்துவந்து கரை ஒதுங்குவதை கரையோர காவல்பணியில் இருந்த படையினர் அவதானித்தனர்.

படைஉயர்அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து இராணுவத்தின் பொறியியல் பிரிவினர்சம்பவ இடத்திற்குச் சென்று சோதனைநடத்தினர்.

கரை ஒதுங்கிய பொதிக்குள் சடலம் இருப்பதைக் கண்ட படையினர் அதனை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

சடலம் மரணவிசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

துர்நாற்றம் வீசும் நிலையில் எடுத்துவரப்பட்ட இச்சடலம் மூன்று பொலித்தீன்பைகளில் பொதிசெய்யப்பட்டிருந்தது.

(அ-1)

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளரை தமிழ்க் கூட்டமைப்புக்குழு சந்திக்கும்

கொழும்பு, ஒக்.9

இலங்கைக்கு இன்று வருகை தரும் ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை கொழும்பிலுள்ள இலங்கைக்கான ஐ.நா. தலைமையகத்தில் ஆர்பரைச் சந்தித்து உரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும்-இடம்பெற்றுவந்த - ஆள் கடத்தல்கள், கொலைகள், கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படும் தமிழர்களின் நில சுவீகரிப்பு மற்றும் சிங்களமயமாக்கல் உள்ளிட்ட தமிழர்கள் அனுபவிக்கும் பலதரப்பட்ட மனித உரிமை மீறல் பிரச்சினைகளை கூட்டமைப்பினர் ஆர்பரிடம் விரிவாக எடுத்துக் கூறுவர் என்று கூட்டமைப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

இம்மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பக்கசார்பற்ற முறையில் விசாரணை நடத்துவதற்கும் மனித உரிமை மீறல்களைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

# நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கருணா இடைநிறுத்தப்பட்டார்!

### பிள்ளையான் புதிய தலைவர்

மட்டக்களப்பு, ஒக்.9

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (ரி.எம்.வி.பி.) என்று அழைக்கப்படுகின்ற கருணா அணியின் மத்திய குழு, அதன் தலைவர் கருணாவை தமது அணியிலிருந்தும் தலைமைப் பொறுப்பிலிருந்தும் இடைநிறுத்தியிருப்பதாக அறிவித்திருக்கிறது.

தமது அமைப்புக்குச் சொந்தமான பல கோடி ரூபா நிதியை அதன் தலைவரான கருணா மோசடி செய்துவிட்டார் - கையாடிவிட்டார் - என்றும், அதனாலேயே அவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார் என்றும் - கட்சியின் மத்தியக் குழுவை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தமது அணிக்குச் சொந்தமான சுமார் 80 கோடி ரூபா நிதியை கையாடிவிட்டார் கருணா என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாறு கையாடிய பணத்தை அவர் வெளிநாடுகளின் வங்கிகளில் தனது பெயரிலும் தனது மனைவி மற்றும் சில உறவினர்களின் பெயர்களிலும் வைப்புச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் முன்னரங்கில் நேற்றும் சிறு மோதல்!

கொழும்பு, ஒக்.9

விடுதலைப்புலிகளுக்கும் - படையினருக்கும் இடையில் நேற்று மன்னார் முன்னரங்க நிலைகளில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. மன்னார், உயிலங்குளம் வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

''விடுதலைப்புலிகளால் முன்னகர்வுக் காவல் நிலைகள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை படைத்தரப்பினர் வெற்றிகரமாக முறியடித்தனர். புலிகள் இருவர் சம்பவத்தில் பலியாகினர். படையினர் தரப்பில் எந்தப் பாதிப்போ, உயிர்ச்சேதமோ இல்லை''

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/ அல்லாரை அ.த.க பாடசாலை மாணவியான

**செல்வி தையல்பாகன் நிரூஜா**

அவர்களை மேலும் பல உயர்வுகள் பெற்று கல்வியிலும் பண்பிலும் உயர்ந்து வாழ வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வி ஊட்டிய அதிபர்,ஆசிரியர்களான வி.மணிவண்ணன், சிவயோகம், வே.அன்பழகன், பாஸ்கரன் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா,மாமாமார்கள்,
அத்தை, அன்ரிமார்கள்.

(66640)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 ★ 06 ★ 1978



உதிர்வு 26 ★ 08 ★ 2007

செல்வி

# ஜெயராசசேகரம் தர்சினி

*(நடன பட்டதாரி ஆசிரியை (B.F.A), மன்/புனித வளனார் றோ.க.த.வித்தியாலயம், மன்னார்)*

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று [9.10.2007] செவ்வாய்க்கிழமை மு.பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*55/3, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (66688)

**தாய், அண்ணன், தம்பி, தங்கை.**

## மரண அறிவித்தல்கள்

### *செபமாலை பிலோமினா*

50/4, இராசசிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபமாலை பிலோமினா நேற்று (08.10.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் செபமாலை அவர்களின் அன்பு மனைவியும், சற்குணம் (பிரான்ஸ்), அந்தோனியாப்பிள்ளை, சந்தலூசியா, வரதசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைசிங்கம், நோபட், சோபியா ஆகியோரின் மாமியும் லின்சன், காலஞ்சென்ற மதனராஜ், அன்றொபினா, சிந்துஜா, மேரிறுபினா, பிறிஸ்கா, பிறிஸ்ரன், ஜாம்சன், கபிஸ்கா, நிரோஜ், மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (09.10.2007) செவ்வாய்க்கிழமை 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50/4, இராஜசிங்கம் வீதி,
திருநகர், யாழ்ப்பாணம். (66705)

தகவல்:-
செ.வரதசீலன்
(நெப்போலியன்)

### *சரஸ்வதி சம்பந்தசரணாலயம்*

தாவடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் பின் தற்காலிக வசிப்பிடமாக துன்னாலை, வவுனியாவை கொண்டவருமான சரஸ்வதி சம்பந்தசரணாலயம் சனிக்கிழமை (06-10-2007) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் அமரர் சம்பந்தசரணாலயத்தின் அன்பு மனைவியும் அமரர் நிர்மலாதேவி, சிவனேஸ்வரன் (அதிபர் மானிப்பாய் இந்துக்கல்லூரி), சந்திரேஸ்வரன் (பிரான்ஸ்) மல்லிகாதேவி (ஜேர்மனி), யோகராணி (கனடா) சகுந்தலாதேவி, சிறீரஞ்சன் (டென்மார்க்), அமரர் புஸ்பராணி, சிறீகாந்தன் (பிரான்ஸ்), சிறீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்னம்மா, அமரர் இராசதுரை, அமரர் இரத்தினம், பொன்னாபரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வினாயகமூர்த்தி, சிறீமுருகன்துரை, கணநாதன் (வீ. அ. அ.சபை, முல்லைத்தீவு), தேவராஜினி, சந்திரகாந்தா, பசுமதி, விஜி, பாணு ஆகியோரின் மாமியும் கஜதீபன், ஆனந், கபிலன், ராஜீவன், ஜனனி, ஆரபி, வைஷ் ணவி, அஸ்வினி, நிவேதா, தக்சிகா, கௌதம், அமரர் கௌசிகா, சிந்துஜன், நிரோஜன், அருண், அஸ்விதா, கஜீபன், வக்ஷிகா, அபிநயா, ஓவியா, பரத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை (11.10.2007) மு.ப 10 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, [illegible] குக்குத்தெரு,
கற்குழி,
வவுனியா.
தொ.பே. 0602243267

தகவல்:
ச. சிவனேஸ்வரன் (மகன்)
(அதிபர்,மானிப்பாய்இந்துக்கல்லூரி)

## வெளிவந்துவிட்டது

* பரீட்சை வழிகாட்டி G.C.E(O/L) வணிகக் கல்வியும் கணக்கீடும்.
* நடைமுறை விடயங்கள் G.C.E (A/L) வணிகக்கல்வி

ஆசிரியர்:சி.சிறிவிமலகாந்தன் B.Com(Hons)

(எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும்)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

யாழ்மாவட்டத்தில் தோல்நீக்கி சுத்தம் செய்து பொதிசெய்யப்பட்ட புறொய்லர் கோழிஇறைச்சி விற்பனைக்கு உண்டு.1/4Kg ,1/2Kg,1Kg தேவைக்கு ஏற்ப விற்கப்படும்.1Kg சுத்தம்செய்த கோழி இறைச்சியின் விலை ரூபா 600. கிடைக்குமிடம்:

யாழ். மாவட்ட கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தபால்பெட்டிச்சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி.

## தேசிய சேமிப்பு வங்கியில் பகிரங்க ஏல விற்பனை

குடத்தனை, ஒக். 9

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் கடந்த 30.09.2006 இல் அடகு வைக்கப்பட்டு 30.09.2007 வரை மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளன.

இந்த ஏல விற்பனை எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக முகாமையாளர் தெரிவித்துள்ளார். (1-78)

## விளையாட்டு வீரர் 12 ஆம் திகதியே பயணம்

யாழ்ப்பாணம், ஒக்.9

மாத்தறை பெலியாவத்தையில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளுக்கான பயண ஒழுங்குகள் எதிர் வரும் 12 ஆம் திகதியே மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ். அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு முன்னர் பயண ஆயத்தங்களுடன் யாழ். ரயில் நிலையத்திற்கு வருமாறு வீர வீராங்கனைகளை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இவர்களுக்கான பயண ஒழுங்குகள் நாளை புதன் கிழமை செய்யப்பட்டிருந்தன. தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது (1)

## ஓய்வூதியர் ஒன்று கூடல்

இலங்கைபோக்குவரத்துச்சபை (வடக்கு) ஓய்வு பெற்ற ஊழியர்நலன் புரிச் சங்கத்தின் இரண்டாவது வருட ஒன்றுகூடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு யாழ். பஸ் நிலைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

## விசேட பூசைகள்

ஏகத்துவ ஆன்மீகக் கழகம் பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையில் சிறிஅம்மாபகவானின் பூசைகளை நடத்தி வருகின்றது. (202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் - 5, 2007 புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

*யா/தென் புலோலி புற்றாளை ம. வித்தியாலய மாணவி*

**மனோஜா நாகேஸ்வரசர்மா**

மேலும் பல சாதனைகள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்

இவரை வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா, தங்கை,
தம்பிகள்,மாமாமார் குடும்பத்தினர்,
பெரியப்பா குடும்பத்தினர் (மலேசியா)
மற்றும் அனைவரும்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

(அ/53905)

## இதய அஞ்சலி

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கௌரவதலைவரும் திட்டப்பணிப்பாளருமாகிய திருமதி திலகா யோகநாதனின் அன்புக் கணவர்

வைத்திய கலாநிதி *வேலுப்பிள்ளை யோகநாதன்*

அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குகின்றோம்.

முகாமைத்துவக்குழு அங்கத்தவரும் ஊழியர்களும்,
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர்புனர்வாழ்வு நிறுவனம்,
இல.05, பழைய பூங்காவீதி, யாழ்ப்பாணம்.

(66711)

# Invitation

**A Service of Remembrance and Thanksgiving on the tenth death anniversary of**

**Rt.Rev.Dr.D.J.Ambalavanar**

Bishop, Jaffna Diocese of the Church of South India

**1971 to 1993**

*will be held at the Uduvil Girls' College Hall, on 10 th October 2007, 4.00 p.m*

**Dr.Chandra Ambalavanar.**

## ஈராண்டு நினைவலைகள்



அமரர்

**கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்**

மண்ணில் 20 - 09 - 1942

விண்ணில் 31 - 10 - 2005

*திதி - (09.10.2007)*

ஈராண்டு சென்றாலும்
இன்றுபோல் உள்ளதையா
நீர்வறளா விழியாகி
நீள்துயரம் அடைந்தோமே
பாருள்ள வரைக்கும்
பண்புடனே நீயிருப்பாய்
பாசமுயர் கணேசா
பாரினுக்கே வாராய்!
ஓம் சாந்தி!

பிரிவால் வாடும் சகோதரி,
மருமக்கள்

18, கதிரவேல் லேன்,
அரியாலை.

(அ/53913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரசிங்கம் ம.வி. நிறுவுநர் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.9

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஸ்தாபகர் வீரசிங்கம் ஞாபகார்த்தமாக வீரசிங்கம் அமுத விழாவும் சஞ்சிகை வெளியீடும் அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றன.

பாடசாலை உயர்தர மாணவ மன்றத் தலைவி மோ.சுசீலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.தேவநாயகமும் சிறப்பு விருந்தினராக தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

நூலின் சிறப்புப் பிரதியை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்திடமிருந்து தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கார்த்திகேசு பெற்றுக் கொண்டார். வெளியீட்டுரையை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் க. தர்மராசா நிகழ்த்தினார். (203 - 131)

## சிமெந்து தூசால் மக்கள் சிரமம்

உடுப்பிட்டி, ஒக்.9

திறந்த வாகனங்களில் சிமெந்து ஏற்றிச் செல்வதால் வீதியில் செல்லும் மக்கள் அதிலிருந்து வீசும் தூசால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கப்பலில் இருந்து சிமெந்து இறக்கிச் செல்லப்படும்போது காற்றுடன் சிமெந்துத் தூசுகள் பறந்து சென்று மக்களின் கண்களில் படுவதாகவும், சுவாசத்தைப் பாதிப்பதாகவும் இதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (203-155)

## முட்டை விலை உயர்வு

குருநகர், ஒக்.9

யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை உயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதுவரை நாளும் 24 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை ஒன்று தற்போது 26 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (203 - 51)

## நிகழ்வுகள்

கரவெட்டி, ஒக்.9

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் அதிபராகப் பணியாற்றி மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற த.தபேந்திரராஜாவிற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்தும் சேவை நலன் பாராட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-70)

***

யாழ்ப்பாணம், ஒக்.9

நவாலி மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிறுவுநர் நினைவுப் பேருரையினை யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் ச.ரவீந்திரா நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார். (203-95)

***

யாழ்ப்பாணம், ஒக்.9

கரித்தாஸ் - கியூடெக் நிறுவன ஊக்குவிப்புத் திட்டத்தால் நடத்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவ சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கியூடெக் ஜெபா மண்டபத்தில் அருட்பணி இ.ஜோ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விவரம் வருமாறு -

பவினா முருகையா (ஊர்காவற்றுறை), யோகானந்தன் சிவவேந்தன் (இணுவில் மத்தியகல்லூரி), ஜெயசிங்கம் மதுரந்தி (சுன்னாகம்), ஜோசப் கார்மேல் (யாழ்ப்பாணம்), இராஜேந்திரன் கிரிதிவாசன் (இணுவில் மத்திய கல்லூரி). (203)

***

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சுவாமி அகண்டானந்த ஜெயந்தியும் நவராத்திரி விழா ஆரம்பமும் இடம்பெறவுள்ளன. (203)

## முகமூடிக் கொள்ளையரால் அபகரிக்கப்பட்ட மோ.சைக்கிள் படையினரால் கண்டுபிடிப்பு

உடுப்பிட்டி, ஒக். 9

வதிரி, கோட்டத் தெருவில் முகமூடிக் கொள்ளையர்களால் கொள்ளை அடிக்கப்பட்ட அரச ஊழியர் ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் கடந்த வெள்ளிக் கிழமை சைக்கிள் திருத்தும் கடை ஒன்றில் இருந்து படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் வதிரி கோட்டத் தெருவில் அரச ஊழியர் ஒருவரது மோட்டார் சைக்கிள் ஒன்று முகமூடிக் கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டது.

குறிப்பிட்ட அரச ஊழியருக்கு அரசால் அந்த மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டதாகவும் அது ஒரு லட்சம் ரூபா பெறுமதியானது எனவும் கூறப்பட்டது.

சம்பவ தினத்தன்று குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்ற முகமூடிக் கொள்ளையர்கள் அரச ஊழியரிடம் கப்பம் கேட்டதாகவும் அதற்கு அவர் தன்னிடம் பணமில்லை என்று தெரிவிக்கவே அவரது மோட்டார் சைக்கிளைக் கொள்ளையிட்டுச் சென்றதாகவும் கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மோட்டார் சைக்கிளையே கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள சைக்கிள் கடை ஒன்றில் இருந்து படையினர் மீட்டுள்ளனர். இவ் விடயம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (203-155)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 9

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் சில பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்**

சி.ராகவன் (166), தே.துவாரகன் (162),கு.அமுதா (160),மோ.பகீரதி (152), சி.வித்தியா (147).

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்**

க. ஐங்கரன் (158), ஸ்ரீ.தாரணி (150), பி. சசிதரன் (141)

**மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்**

அ.அமிர்தவர்ஷிணி(173),ஸ்ரீவிஸ்ணுவரதன்(155), வ.தினூஷன் (155), கு.லக்ஷன் (149), வெ.ரவிஷாந் (153), ஸ்ரீ.கிரிஷாந் (145).

**சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

து.ஜதுர்சன் (173), இ.ராகவி (170), சி.கிருஷிகா (169), த.தர்மிகா (167), உ.தேனுகானி (167), சி.திருவேல் (165), க.பிரியங்கன் (163), சி.மதுஷா (162), வா.தாட்சாஜினி (162), ந.பானுகா (161), வே.தர்சன் (160).

சி.கார்த்திகா (156), த.சாரூபன் (156), இ.கஜந்தன் (156), சு.குகரதன் (155), இ.பிரலண்ஜா (151), இ.சந்ஜித் (150), சு.இராகவன் (150), ச.சஞ்ஜா (148), ச.யோகீசன் (146).

ஞா.வினோதன் (145), கு.மகிழினி (145), ச.குகர்ச்சிகா (145), பா.சஞ்ஜீபன் (144), ர.கௌசிகன் (144), ஜெ.அனோஜா (142), வி.மிதுஷா (142), சி.சோபிகா (142), சி.நிதர்சிகா(140),சோ.டினா(140).

**மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

பொ.தனுசிகா (168), ம.டிவானா (160), ஸ்ரீ.சிவஜா (159),க.லக்ஷினி (155), கா.கேதாரன் (154),சி.அனோஜிகன் (151), ஜெ.கஜவதனா (145),ச.தனுசிகன் (145), கு.மீனுஷா (143), செ.சரண்ஜா(141).

## பொது இடத்தில் வைத்து மதுபானம் விற்பதால் மக்கள் பெரும் சிரமம்

குருநகர், ஒக்.9

குருநகர் மத்திய கிழக்கு வீதியில் முதலாம் வெளியில் அமைந்துள்ள பொதுக் கிணற்றுக்கு அருகில் வைத்து மதுபானம் விற்கப்படுவதனால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் என்று பொது மக்கள் தெரிவித்தனர்.

தினமும் மாலை நேரங்களில் மதுபான விற்பனை இடம்பெற்று வருகின்றது. இதனால் அந்தப் பொதுக்கிணற்றினை மக்கள் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அததுடன் மதுபானம் அருந்துபவர்கள் தகாத வார்த்தைகள் பேசுவதால் பெண்கள் செல்வதற்கு அச்சம் அடைந்து வருகின்றனர். இப்பொதுக்கிணறு குடியிருப்புக்கள் மத்தியில் அமைந்துள்ளது. மதுபானம் அருந்துபவர்கள் அப் பகுதியிலுள்ள குடியிருப்பாளர்களின் வீடுகளை நோக்கி கற்கலையும் வீசி வருகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே உரியவர்கள் இதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-51)

## குறைவான நிறையில் திராட்சை விற்பனையில்

யாழ்.பஸ்நிலையத்திற்கு முன்பாக திராட்சைப்பழ விற்பனையில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளில் பலர் நிறைகுறைவான வியாபாரத்தையே மேற்கொண்டு வருவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

போட்டியாக விற்பனையை மேற்கொண்டு வரும் வியாபாரிகள் ஒரு கிலோ திராட்சைப் பழம் 100 ரூபா என்று கூறி விற்பனையை செய்யும் அதேவேளை, பழம் வாங்கவரும் பொது மக்களுக்கு அளவில் பெரும் மோசடிகளை செய்வதனை அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு கிலோ என்று கூறி 800 கிறாம் பழமே விற்பனை செய்யப்படுகின்றது. எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனமெடுத்து இம்மோசடி விற்பனையை தடை செய்வதுடன் அவ்வாறு ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-288)




காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் அண்மையில் நடைபெற்ற கலை இலக்கிய விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையுரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும் கலை இலக்கிய விழாவில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

## ஆவண காப்பகத்திற்கான ஆவணங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால், பிரதேச செயலகத்தில் ஆவணக் காப்பகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு வடமராட்சிப் பிரதேசம் சார்ந்த கட்டுரைகள், பிரதேச எழுத்தாளர்களது புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆக்கங்கள், ஒலிநாடாக்கள், பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், கலை இலக்கிய மன்றங்களினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர்கள் போன்றவற்றுடன் பண்பாட்டியல் சார்ந்ததும், பிரதேச வளம் சார்ந்ததுமான ஆய்வுக் கட்டுரைகள், ஆவணங்கள், ஏட்டுப் பிரதிகள் போன்ற ஆவணங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைப் பாதுகாப்புடன் எதிர்காலத்தில் ஆய்வினை மேற்கொள்வோர் பயன்படுத்தும் வகையிலும் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே பிரதேச நலன் விரும்பிகள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் தம்மிடமுள்ள மேற்படி ஆவணங்களை கரவெட்டிப் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் வழங்கி ஒத்துழைக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (203)

## சிவில் அலுவலகம் மக்களின் நன்மைகருதி இடம்மாற்றம்

உடுப்பிட்டி, ஒக்.9

நெல்லியடியில் இயங்கிவந்த பாதுகாப்புப் படையினரின் 'சிவில்' காரியாலயம் குஞ்சர் கடையடிக்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி காரியாலயம் முன்பு நெல்லியடி பாதுகாப்புப் படையினரின் முகாமிற்கு முன்பாக அமைந்திருந்தது. தற்போது மக்களின் நன்மை கருதி கரணவாய் குஞ்சர் கடையடிக்கு சமீபமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (203 - 155)

## அபிராமி அந்தாதி பாடல்கள் மீள் பதிப்பு

சுழிபுரம் ,ஒக். 9

நவராத்திரி காலத்தில் அம்பிகையின் சிறப்புக்களைப் படிப்பதற்கென பஜனைச் சபையினர் அபிராமியந்தாதி 44ஆவது, 46ஆவது பாடல்களுக்குப் புலவர் கே.சாந்தான இராமன் எழுதிய கருத்துக்களை மீள் பதிப்புச் செய்து இலவசமாக விநியோகிக்கின்றனர்.

நவராத்திரி காலத்தில் வாசித்து பயன் பெறும் வண்ணம் தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் செயலாளர், பஜனைச் சபை, வழக்கம்பரை, சுழிபுரம் என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். (203-28)

## புகையிலை நாற்றுச் செய்கையில் ஆர்வம்

உடுப்பிட்டி, ஒக்.9

பொலிகண்டியில் புகையிலை நாற்று மேடைச் செய்கையாளர்கள் நாற்றுச் செய்கையில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

பொலிகண்டி புகையிலை நாற்று மேடை நாற்றுக்கள் யாழ்.மாவட்டத்திலேயே சிறந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்துதான் வலிகாமம், தென்மராட்சி போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (203 - 155)

## பாவனைக்குதவாத பருப்பு விநியோகம்

நாவற்குழி, ஒக்.9

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நிவாரணத்துக்கு வழங்கப்படும் பருப்பு பாவனைக்கு உதவாத வகையில் உள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நிவாரணத்துக்கென யாழ்.செயலகத்தால் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்பட்ட மஞ்சள் பருப்பே பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாகவும் இப்பருப்பை உணவுக்குப் பயன்படுத்த முடியாது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலவச நிவாரணம் என்ற பெயரில் இப்படியான தரமற்ற உணவுப் பொருள்களைப் பல தடவைகள் தாம் பெற்றுள்ளதாகப் பொதுமக்கள் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் அரச அதிகாரிகள் மனிதாபிமான ரீதியில் செயற்பட்டு தரமான உணவுப் பொருள்களை நிவாரணமாகவழங்க வேண்டும்என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (202 - 288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கை

எங்கள் கல்லூரியின் முன்னாள் அதிபர்
ச.சிவனேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சரஸ்வதி சம்பந்தசரணாலயம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருப்போர்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
சண்டிலிப்பாய்.

கல்லூரிச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 இல் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை மாணவன்

செல்வன் **சுந்தரலிங்கம் பவன்**

அவர்களை கல்வியில் மேலும் சிறப்புகள் பெற வாழ்த்துவதுடன் கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு.

வாழ்த்துவோர்
அம்மம்மா, அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், அத்தான், மருமகன், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சான், மச்சான்மார், அப்பம்மா, அப்பப்பா.

(ச/53397)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளை பெற்றுச் சித்தியடைந்த

செல்வன்

**ஜெயக்குமார் லக்சுஜன்** *(மாவட்ட நிலை -20)*

அவர்களை மனதாரப் பாராட்டிக் கல்வியில் மேலும் பல சிறப்புகளைப் பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம.

அரசடி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (66681)

வாழ்த்துவோர்:
பாட்டா, அம்மம்மா, இரவீன் மாமா, மதிமாமி, வதனி அன்ரி, அன்ரா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2007ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த*
யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை *மாணவன்*
*செல்வன்* **நெடுஞ்செழியன் கலிபரன்**

*மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.*

*அண்ணாசிலையடி,*
*கரணவாய்.* *(சி/53398)*

வாழ்த்துவோர்:
பெரியமாமா, செல்வி அத்தை *(சுவீடன்)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யாழ்/தம்பசிட்டி**
**அ.மி.த.க.பாடசாலையில்** *2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த மாணவன்*

செல்வன் சிவானந்தராஜா வித்தகன்

*அவர்களைப் பல கலைகளையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் மனதார வாழ்துகின்றோம்.*

தேசியர் இல்லம்,
கோப்பாய் தெற்கு, *(66679)*
கோப்பாய்.

**வாழ்த்துவோர்:**
சு.சிவசுப்பிரமணியம் *(ராசா ஐயர்-அப்பப்பா)*,
கமலாஜனி *(அம்மா)*,
ஜேர்மனியில் வசிக்கும் மாமாமார்,
பெரியம்மா, சித்தி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்தில்

**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களான**

| | |
|---|---|
| **செல்வன் ஜெ.ஜெசிந்தன்** | **149 புள்ளிகள்** |
| **செல்வி சு.துஷ்யந்திகா** | **144 புள்ளிகள்** |

*வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த மாணவர்களான -*

| | |
|---|---|
| **செல்வி வி.துஜிபா** | **134 புள்ளிகள்** |
| **செல்வி பே.வினிதா** | **122 புள்ளிகள்** |
| **செல்வி ப.சரணியா** | **119 புள்ளிகள்** |
| **செல்வன் கு.நபஜீதன்** | **117 புள்ளிகள்** |
| **செல்வன் சி.பிரசாந்** | **116 புள்ளிகள்** |
| **செல்வி த.அனுசியா** | **109 புள்ளிகள்** |

அனைவரையும் மனதாரப் பாராட்டி மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் இவர்களை நல்வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும், வகுப்பாசிரியரையும் மற்றும் பாடசாலை சமூகத்தினரையும் மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
*யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்,*
*நயினாதீவு*
(66645)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
ச.சிவனேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
சரஸ்வதி சம்பந்தசரணாலயம்
அவர்கள் வவுனியாவில் 06.10.2007 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மானிப்பாய்
இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

கல்லூரிச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



கரவெட்டி, உதவிப் பிரதேச செயலராக கடமையாற்றும்
*சண்முகராசா சிவசிறி*
அவர்களின் அன்புத் தந்தையார்
**சிவசம்பு சண்முகராசா**
சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*தொட்டிலடி,*
*சங்கானை.* **முருகேசு சிறீகரன்.** (66697)

## டெங்கு பரவலைத் தடுக்க ஏழாலையில் சிரமதானம்

குடாநாட்டில் டெங்குநோய் பரவி வருவதனால் அதனைக் கட்டுப் படுத்தும் முகமாக ஏழாலை கண்ணகை அம்மன் விளையாட்டுக் கழக இளைஞர்கள் அப்பகுதி யில் உள்ள பற்றைகள், புல் அகற்றும் செயற்பாட்டில் ஈடு பட்டுள் ளார்கள்.

கடந்த ஆண்டில் ஏழாலைப் பகுதிகளிலும் மழைகாலத்தில் பலர் வைரஸ் காய்ச்சல்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள் ளார்கள்.

இந் நிலைமையைக் கருத்தில் கொண்ட அப்பகுதியைச் சேர்ந்த அம்பாள் விளையாட்டுக் கழக இளைஞர்கள் சிரமதான அடிப்படையில் கண்ணகி அம்மன் கோயிலடி சுற்றாடலை துப்பரவு செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றனர்.(203-68)

## சிறுவர்தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 9

சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி சிறுவர் தின விழா வைக்கொண்டாடினர்

கழகத் தலைவர் லயன் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி உள்ளதாக கழகச் செயலாளர் லயன் கா.இராசதுரை தெரிவித்தார்.

அன்றைய தினம் கொடிகாமம் நகர்ப் பகுதியில் மரக்கன்று நடப் [illegible]

## பின்னுறுதித் தீர்வை
## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

*சிறீதரன் வள்ளியம்மை*
15ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
வழக்காளி

எதிர்

வழக்கு இல: 42
விடயம்: விவாகரத்து

பொன்னம்பலம் சிறீதரன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
எதிராளி

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21ஆம் திகதி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.ஜெயராமன் றொஸ்கி அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திரு. எம். றெமிடியஸ் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளியோ எதிராளி சார்பில் சட்டத்தரணியோ பிரசன்னமாயிருக்கவில்லை.

இவ்வழக்கானது 17.01.2006 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை அனுப்புவதற்கு வழக்காளி பல முயற்சிகளை மேற்கொண்டார். எதிராளி ஏலவே வசித்த முகவரியில் இருந்து வேறு இடத்திற்குமாறிச்சென்றதன் காரணமாக வழக்காளிக்கு அழைப்புக்கட்டளை அனுப்புவதிலே அதிக காலத்தை செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதை இவ்வழக்கேட்டினை பரிசோதிக்கின்றபோது அவதானிக்க முடிகின்றது. பதிவுத் தபால் மூலமும் நீதிமன்றின் பிஸ்காலின் மூலமும் எதிராளிக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முடியாததையிட்டு வழக்காளி பிரதியீட்டு முறையில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்க மன்றினுடைய அனுமதியைப் பெற்றவுடன் 25.01.2007 அன்று உதயன் பத்திரிகையில் பிரசுரித்ததன் மூலம் பிரதியீட்டு முறையில் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை அனுப்பியதுடன் அப் பத்திரிகையின் பிரதி இந்நீதிமன்றில் அணைத்துள்ளார் என்பதுடன் எதிராளிக்கு உரிய முறையில் அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டது என்பதில் நீதிமன்றம் திருப்தியடைந்ததன்பெயரில் ஒருமுக விளக்கத்திற்கு இவ்வழக்கினை எடுக்கத் தீர்மானித்தது.

வழக்காளி தனது சாட்சியத்தில் தான் ஏற்கனவே திருமணம் புரிந்து அத் திருமணத்தின் மூலமான இரு பிள்ளைகளும் தன்னுடன் இருப்பதாக சாட்சியமளித்துள்ளார். வழக்காளி இவ்வழக்கின் எதிராளியை 12.03.2000 அன்று சட்டப்படி திருமணம் செய்ததாகவும் தொடர்ந்து இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்துவந்ததாகவும் அவ் வேளை எதிராளி வழக்காளியை மனிதாபிமானமற்ற முறையில் அடித்து, துன்புறுத்தி சித்திரவதை செய்ததாகவும் அதனைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டளவில் ஊர்காவற்துறை பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வாறு அடித்துத் துன்புறுத்தியதன் மூலம் எதிராளியானவர் தன்னை அமைவுவழியாக வன்மவுறவறுப்பு செய்துள்ளார் என வழக்காளி தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்.

வழக்காளியின் சாட்சியம், வ1 மற்றும் வழக்கேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கின்ற போது எதிராளியானவர் வழக்காளியை அமைவுவழியாக வன்மவுறவறுப்பு செய்துள்ளார் என்பதில் நீதிமன்றம் திருப்தியடைந்துள்ளதால் வழக்காளிக்கும் எதிராளிக்கும் 12.03.2000அன்று செய்துகொள்ளப்பட்ட திருமண அத்தாட்சிப்பத்திரத்தின் இல. 7309 கொண்ட விவாகப் பதிவினை வெற்றும் வெறிதாக்கி விவாகரத்துக் கட்டளையை ஆக்குகின்றேன். வழக்காளி தனது சாட்சியத்தில் தான் எதிராளியிடம் இருந்து நிரந்தர பிரிமனை பணமோ வழக்குச் செலவோ கோராமையினால் அவ்விடயங்களில் நீதிமன்றம் கட்டளை எதனையும் ஆக்கவில்லை.

இப்பின்னுறுதித் தீர்வையானது உதயன் தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எதிராளியானவர் இதற்கு எதாவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து 3 மாதத்திற்குள் ஆட்சேபனையை தெரிவித்தல் வேண்டும் அல்லது 3 மாதத்தின் பின் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் என கட்டளையிட்டு தீர்ப்பளிக்கின்றேன்.

2007ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21ஆம் திகதி.

வரைந்தது.
மு.றெமிடியஸ்
வழக்காளியின் சட்டத்தரணி

(66684)

மாவட்ட நீதிபதி
மாவட்ட நீதிமன்றம்
ஊர்காவற்றுறை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


பூவலிங்கம் நிஷானி


மனுவேற்பிள்ளை தனுஷன்


தவக்குமார் வுவீனா


சிவகுமார் சதீஸ்கா

தெல்லிப்பழை யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி பாடசாலையில் 2007 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவச்செல்வங்களான

| | |
|---|---|
| பூவலிங்கம் நிஷானி | -156 புள்ளி |
| மனுவேற்பிள்ளை தனுஷன் | -150 புள்ளி |
| தவக்குமார் வுவீனா | -150 புள்ளி |
| சிவகுமார் சதீஸ்கா | -143 புள்ளி |

அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற உ.மோகன்ராஜ், ந.புகலிஜா அவர்களையும் பாராட்டுவதோடு, எமது பாடசாலையில் 22 வருடகாலமாகச் சேவையாற்றி 25 வீத சித்தி எய்துவதற்கு வழிப்படுத்திய வகுப்பாசிரியர் திருமதி ச.ஸ்கந்தகுமார் அவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்திப் புதிய அதிபரையும் வரவேற்கின்றோம்.

**- பாடசாலைச் சமூகம்**

## மரண அறிவித்தல்



### சிவசம்பு சண்முகராசா

*( மலேரியா தடுப்பு ஒய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்)*

சங்கானை கிழக்கு, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சண்முகராசா அவர்கள் 08.10.2007 திங்கட்கிழமை அதிகாலை சிவபதம் எய்தினார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - மாணிக்கம் தம்பதியரின் (ஸ்தாபகர் -சங்கானை யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) இளைய மகனும் அமரர்கள் காசிநாதர்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அழகேஸ்வரியின் பேரன்புக் கணவரும் சிவாஜினி(கனடா), சிவசிறி (உதவிப்பிரதேச செயலர், கரவெட்டி), சிவஅருள்(லண்டன்), சிவஅருட்செல்வி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசிகரன்(கனடா), தர்மிலா(ஆசிரியை, மணற்காடு றோ.த.க. பாடசாலை), ராஜி(லண்டன்), வைத்திய கலாநிதி கிருபாலர்(லண்டன்) ஆகியோரின் நேசமிகு மாமனும், அமரர்கள் கனகசபை - அன்னபூரணம் சி.சிவப்பிரகாசம், சி.இராமநாதன், சி.சரவணமுத்து ஆகியோரின் அருமைச் சகோதரனும், யோகநாதன்-புவனேஸ்வரியின் (கனடா) அன்பு மைத்துனரும் தக்ஷன், ஜாதவன், ஜனனி(கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை விளாவெளி இந்து மாயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எல்லை வீதி,
சங்கானை. (66694)

தொ.பே 077 7064051

தகவல்:
ச.சிவசிறி *(மகன்)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ஆம் திகதி வியாழக்கிழமை விரதம் மேற்கொள்வதில் எத்தகைய வேதாகம வேறுபாடும் இல்லவே இல்லை

*இம்முறை நவராத்திரி விரதம் எப்போது ஆரம்பம் என்ற சர்ச்சை ஏற்கனவே தொடங்கியுள்ளது.*

*12.10.2007 வெள்ளிக்கிழமை நவராத்திரி விரதாரம்பம் என்கின்றன திருக்கணிதப் பஞ்சாங்கமும் அதனடிப்படையில் கணிக்கப்பட்ட கலண்டர்களும்.*

*ஆனால், 11.10.2007 வியாழனன்று நவராத்திரி ஆரம்பம் என்கின்றன வாக்கிய பஞ்சாங்கமும் அதனடிப்படையில் கணிக்கப்பட்ட கலண்டர்களும்.*

*ஆனால், இரண்டிலுமே 21.10.2007 அன்று மஹா நவமி என்றும் அடுத்த நாள் 22ஆம் திகதி விஜயதசாமி என்றும் குறிப்பிடப்படுகின்றன.*

*அதாவது, திருக்கணிதக் கணிப்பின்படி 9ஆம் நாள் மஹா நவமியும், வாக்கியக் கணிப்பின்படி 10ஆம் நாள் மஹா நவமியும் வருவதால், இரண்டு முறையிலும் மஹா நவமியும், விஜயதசமியும் மாறாமல் வருகின்றன.*

*எனவே, நவராத்திரி விரத ஆரம்பமாக எந்தத் தினத்தைக் கொள்வது?*

*அது பற்றிய சிந்தனையைத் தூண்டும் ஓர் ஆய்வைக் கடந்த 22.09.2007 'உதயனில்' யில் முன்வைத்தார் சி.ஜெகதீஸ்வர சர்மா.*

*ஏழாலைக் குமரன் அதற்குப் பதில் தரும் விதத்தில் ''நவராத்திரி விரதாரம்பம் சர்ச்சையைத் தீர்க்க பஞ்சாங்கங் கணிப்பாளர்கள் ஒன்றுபடவேண்டும்'' என்று கடந்த 5 ஆம் திகதிய 'உதயனில்' யில் தெரிவித்திருந்தார்.*

*அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் கடந்த 7ஆம் திகதிய 'உதயனில்' கருத்துத் தெரிவித்த த.இராசலிங்கம் 'இந்த வருடத்தின் நவராத்திரி விரத ஆரம்பம் இந்தியப் பஞ்சாங்களின் கணிப்பு எப்படி?' என்று தெரிவித்திருந்தார். இங்கு கொக்குவில் சோதிட பரிபாலன சபையைச் சேர்ந்த இ.வெங்கடேச ஐயர் பதில் தருகிறார்.*

*இன்றுடன் இச்சர்ச்சை பூர்த்தியாகின்றது. வாசகர்களே நீங்கள் சரி எது பிழை எது என்று தீர்மானத்துக்கு வாருங்களேன்.* *(ஆ-ர்)*

காலத்துக்கு காலம் பஞ்சாங்கங்களுக் கிடையே முரண்பாடுகள் இருப்பதாகப் பிரச்சினையைக் கிளப்புவது ஒரு சாதாரண சம்பவமாகிவிட்டது.

இற்றைக்கு 150 வருடங்களாக வாக்கிய பஞ்சாங்கம் கணிப்பதையே சைவ உலகம் ஏற்றுக்கொண்டது. இதற்குக் காரணம் இப்பஞ்சாங்கத்தின் கணித முறையும் விரத அனுஷ்டிப்பும் வேத ஆகமங்களில் குறித்துள்ளவைகளில் இருந்து அணுவளவும் பிசகாது விரதம், முகூர்த்தம் முதலானவற்றைக் கணிப்பதே.

கணிதத்தை மேல்நாட்டு முறைப்படி கணிப்போம். மற்றவைகளைக் கீழ் நாட்டு முறைப்படி கொள்ளுவோம் என்று ஒரு பஞ்சாங்கம் தடுமாறிக் கொண்டிருப்பதை இந்த 150 வருட காலமாக பல தடவைகளில் நாம் அடிக்கடி எழுதவேண்டி நேர்ந்தது.

காட்சிக்குப் பஞ்சாங்கம் செய்கிறோம். வேதத்தில் கூறியவற்றைக் திருத்திக் கணிக்கிறோம் என்று கூறும் நவீன கணிதகாரர் வேதத்தில் கூறியவற்றைப் பிரமாணமாக எடுத்துச் சொல்வதும் மேற்கோள்களாகக் காட்டுவதும் நகைப்புக்கிடமானதே.

ஒரு மூச்சில் வேதங்கள் பிழை; அவை காட்சிக்கு ஒத்துவரா என்றும் மறு மூச்சில் விரதங்களுக்கு வேதங்களில் ஆதாரம் காட்டுவதும் தங்களைத் தாங்களே அறுத்துக்கொள்ளும் முரண்பட்ட மனதைக் காட்டுகின்றது. தயவுசெய்து ஒரு வழியில் நில்லுங்கள்.

பொதுவாக சைவசமய விரதம் அனுஷ்டிக்கும் எவருக்கும் பொதுவாகத் தெரிந்த சில உண்மைகள் சி.ஜெகதீஸ்வரசர்மாவுக்கு புரியாமல் இருப்பது அவரின் சைவசமய ஈடுபாட்டையும் விரதம் அனுட்டிப்பதற்கு வேண்டிய அறிவையும் எடுத்துக்காட்டுகின்றது.

அதாவது சில விரதங்கள் இராத்திரி விரதங்கள், சில விரதங்கள் பகல் விரதங்கள் சில விரதங்கள் திதிகளை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றில் நவராத்திரி, இராத்திரி விரதமாகும்.

திதிகள் ஒரு நாளில் நிற்கும். இதில் மாற்றம் ஏற்படுவதும் உண்டு. பிரதமைத் திதி இரவில் கூடியிருக்க விரதம் கொள்வதில் எத்தகைய வேதாகம வேறுபாடுமில்லை. காலையில் அமாவாசையிருக்க மிகுதியான அன்று முழுநாளும் பிரதமை நிற்க விரதம் கொள்ளாமல் இருப்பது வேதாகம முறைக்குப் பிழையாகும்.

முன்னைய வருடங்களில் காலையில் அமாவாசையிருக்க அன்றே நவராத்திரி விரதாரம்பம் என்று திருக்கணிதரே குறித்திருக்கும் பல வருடங்களை அறியத்தருகின்றோம்.

பிரம்மஸ்ரீ மேதை ரி.எஸ்.விசுவநாத சிரௌதிகள் - பி.ஏ.

அவர்கள் கணித்த திருக்கணித பஞ்சாங்கங்களில்

விரோதி வருடம் புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி (25.09.1889) புதன்கிழமை அமாவாசை முற்பகல் 8.10 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

கர வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் திகதி (03.10.1890) சனிக்கிழமை அமாவாசை காலை 6.30 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 6 ஆம் திகதி (21.09.1903) திங்கட்கிழமை அமாவாசை முற்பகல் 8.48 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி (09.10.1904) ஞாயிற்றுக் கிழமை அமாவாசை முற்பகல் 10.32 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

பிரமாதீச வருடம் புரட்டாதி மாதம் 15ஆம் திகதி (03.09.1913) செவ்வாய்க் கிழமை அமாவாசை முற்பகல் 10.13 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

ரௌத்திரி வருடம் புரட்டாதி மாதம் 27ஆம் திகதி (12.10.1920) செவ்வாய்க் கிழமை அமாவாசை காலை 6.13 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

துந்துபி வருடம் புரட்டாதி மாதம் 6ஆம் திகதி (21.09.1922) வியாழக்கிழமை அமாவாசை முற்பகல் 9.59 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

ருதிரோற்காரி வருடம் புரட்டாதி மாதம் 25ஆம் திகதி (10.10.1923) புதன்கிழமை அமாவாசை நண்பகல் 11.29 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

அங்ரஸ் வருடம் புரட்டாதி மாதம் 15 ஆம் திகதி (30.09.1932) வெள்ளிக்கிழமை அமாவாசை முற்பகல் 11.00 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

**இவ்வாண்டுகளில் எல்லாம் திருக் கணித பஞ்சாங்கத்தில் அமாவாசை பகல் இருக்க அன்றே நவராத்திரி விரதாரம்பம் குறித்திருப்பதைப் பொதுமக்கள் கவனிப்பார்களாக.**

அவருக்கு பின்பு தொடர்ந்து -

**பிரம்மஸ்ரீ எவ்.ஆர்.எஸ்.சுப்பிரமணிய ஐயர்கணித்த திருக்கணித பஞ்சாங் கங்களில்**

விருஷ வருடம் புரட்டாதி மாதம் 6ஆம் திகதி (21.09.1941) ஞாயிற்றுக்கிழமை அமாவாசை முற்பகல் 10.09 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

பார்த்திப வருடம புரட்டாதி மாதம் 21ஆம் திகதி (06.10.1945) சனிக்கிழமை அமாவாசை முற்பகல் 10.52 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்(மொத்தம் 11 நாட்கள்).

விரோதி வருடம் புரட்டாதி. மாதம் 7ஆம் திகதி (22.09.1949) வியாழக்கிழமை அமாவாசை மாலை 5.51 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

நந்தன வருடம் புரட்டாதி மாதம் 4ஆம் திகதி (19.09.1952) வெள்ளிக்கிழமை அமாவாசை முற்பகல் 12.53 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

துர்முகி வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் திகதி (04.10.1956) வியாழக்கிழமை அமாவாசை முற்பகல் 9.53 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம். (மொத்தம் 11 நாட்கள்).

அமாவாசை பகல் இருக்க அன்றே நவராத்திரி விரதாரம்பம் குறித்துள்ளார்.

**பிரம்மஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் (தற்போதைய பஞ்சாங்க கணிதர்) கணித்த திருக்கணித பஞ்சாங்கங்களில் -**

விசுவாசு வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் திகதி (25.09.1965) வெள்ளிக்கிழமை அமாவாசை காலை 8.48 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

பராபவ வருடம் புரட்டாதி மாதம் 28ஆம் திகதி (14.10.1966) வெள்ளிக்கிழமை அமாவாசை காலை 9.22 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

ராக்ஷத வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் திகதி (05.10.1975) ஞாயிற்றுக்கிழமை அமாவாசை காலை 8.54 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

ரத்தாக்ஷி வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் திகதி (25.09.1984) செவ்வாய்க்கிழமை அமாவாசை காலை 8.41 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

குரோதன வருடம் புரட்டாதி 28ஆம் திகதி (14.10.1985) திங்கட்கிழமை அமாவாசை காலை 10.04 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

பாவ வருடம் புரட்டாதி மாதம் 19ஆம் திகதி (05.10.1994) புதன்கிழமை அமாவாசை காலை 6.06 மணி வரை அன்று நவாாத்திரி ஆரம்பம்.

சுபானு வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் திகதி (26.09.2003) வெள்ளிக்கிழமை காலை 9.10 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

தாரண வருடம் புரட்டாதி மாதம் 29 ஆம் திகதி (14.10.2004) வியாழக்கிழமை அமாவாசை 8.48 மணி வரை அன்று நவராத்திரி ஆரம்பம்.

மேலே உள்ள சான்றுகள் அனைத்தும் திருக்கணித பஞ்சாங்கத்தில் உள்ளவையே

அமாவாசை பகல் இருக்க அன்று நவராத்திரி விரதாரம்பம் என்று குறித்துள்ளார். இந்த மாற்றம் திருக்கணிதர் கொண்ட மனக்கலக்கமே ஒழிய பஞ்சாங்கங்களில் கலக்கமில்லை. தாம் பிழையாகக் குறித்துக்கொண்டு பஞ்சாங்கங்களில் கலக்கமெனப் பொதுமக்களை ஏமாற்றுகிறார்.

மேற்கூறிய ஆண்டுகளில் அமாவாசை பகல் இருக்க இரவு நவராத்திரி கொண்டதற்கு வேதங்களில், ஆகமங்களில் அன்று கொண்ட சுலோகங்களும், படல்களுமே இன்றும் விதியாயுள்ளன. ஆனால் முன் கூறிய மொழி பெயர்ப்புகளை இன்று சி. ஜெகதீஸ்வரசர்மா மாற்றுகிறார்.

பொதுமக்களுக்கு வடமொழி கல்வியறிவு இல்லையென்பதினால் ஒரு சுலோகத்தைப் போட்டு அதற்கு பிழையான உரைகளையும் எழுதிப் பொதுமக்களை ஏமாற்றுகிறார்.

உதாரணமாக சரசோதிமாலையில் -

**''அரிவையில் இரவிசேர்ந்து ஐப்பசி பிறை**

**வருபிரதமை முதல் நவமி ஈறாதாய்''**

என்பதற்கு **"கன்னி மாதமாகிய புரட்டாதி மாதத்திலே சூரியன் நிற்க அமாவாசையை அடுத்துவரும் பிரதமை''** என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

**''அமாவாசை இரவில் நிற்கக் கூடிய பிரதமையில் நவராத்திரித் தொடக்கக் கும்பம் வைப்பதில்லை''**

சிலவிரதங்கள் பகலில் கொள்ளப்படுவன, சில விரதங்கள் இரவில் கொள்ளப்படுவன. நவராத்திரி என்பது இரவில் கொள்ளப்படும் விரதம். **''அமாயுக்தா நகர்த்தவ்யா''** என்னும் சுலோகத்தில் அமாவாசையோடு கூடிய இரவில் செய்யக்கூடாது என்பது கருத்தேயன்றி வேறல்ல.

இதனை அவர் தவறாகப் புரிந்து அமாவாசை சேர்ந்த பிரதமையென்று கருத்துக் கூறுகிறார். பிரதமை என்ற சொல்லே சுலோகத்தில் இல்லாதிருக்கத் திரிக்கின்றார். இன்னும் ''யதீர்குர்ய்யாத்'' என்னும் சுலோகத்திலும் அமாவாசையோடு சேர்ந்த பிரதமையில் என்ற கருத்துக் காணப்படவில்லை.

அமாவாசை முடிய பிரதமை தொடங்குவது வழக்கம். அவ்வாறிருக்க அமாவாசையுடன் சேர்ந்த பிரதமை என்பதற்குக் கருத்து யாது? ஆகவே சுலோகங்கள் போட்டால் ஆதாரமிருக்கிறதென்று பொதுமக்கள் மருளுவார்கள் என்றே அவை குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அடங்கிய கருத்து வாக்கிய பஞ்சாங்கம் கொண்ட நவராத்திரிக்கே ஆதாரம் கொடுக்கின்றன.

இதைவிட இரகுநாதையர் வாக்கிய **பஞ்சாங்கத்திலும்** பகலில் அமாவாசை முடிய பிரதமை கூடிய காலத்தில் இரவு நவராத்திரி குறிக்கப்பட்ட காலங்கள் பின்வருமாறு -

சோபகிருது வருடம் (21.09.1903), குரோதி வருடம் (9.10.1904), பிரமாதீச வருடம் (30.09.1913), நள வருடம் (29.07. 1916), பிங்கள வருடம் (16.10.1917), காலயுத்தி வருடம் (5.10.1918), சித்தார்த்தி வருடம் (24.09.1919), ரௌத்திரி வருட்ம் (12.10.1920), துந்துபி வருடம் (21.09. 1922), ருத்ரோற்காரி வருடம் (10.10.1923), குரோதன வருடம் (18.09.1925), ஆங்கீரச வருடம் (30.09.1932), விசு வருடம் (21.09. 1941), சித்திரபானு வருடம் (10.10.1942), பார்த்திப வருடம் (6.10.1945), சர்வசித்து வருடம் (14.10.1947), கர வருடம் (1.10. 1951), நந்தன வருடம் (1.9.1952), விஜய வருடம் (8.10.1953), ஜய வருடம் (27.9.1954), துர்முகி வருடம் (4.10.1956), விசுவாவசு வருடம் (25.09.1965), பராபவ வருடம் (14.10. 1966), பரிதாபி வருடம் (7.10.1972), இராக்ஷத வருடம் (5.10.1975), ரௌத்திரி வருடம் (9.10.1980).

துர்மதி வருடம் புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி (28.09.1981) திங்கட்கிழமை அமாவாசை காலை 9.31 மணி வரை அன்று நவராத்திரி விரதம் ஆரம்பம். (மொத்தம் 11 நாட்கள்)

பிரமோதூத வருடம் புரட்டாதி மாதம் 3ஆம் திகதி (19.09.1990) புதன்கிழமை அமாவாசை காலை 6.21 மணி வரை அன்று நவராத்திரி விரதம் ஆரம்பம். (மொத்தம் 11 நாட்கள்)

முற்காலங்களில் வேதாகம முறைப்படி அமாவாசை முற்பகலிருக்க இரவு நவராத்திரி விரதம் கொண்டாடியதற்கு திருக் கணித வாக்கிய பஞ்சாங்கங்களிலிருந்து வேண்டிய ஆதாரங்கள் தந்திருக்கிறோம். மார்கழித் திருவாதிரையன்று முடிவாகக் கொண்டு 10 நாள் முன்பு திருவெம்பாவை ஆரம்பிக்க வேண்டும்.

நவராத்திரி அப்படியன்று, இது பிரதமை முதல் நவமியீறாக கொள்ள வேண்டுமென்று வேதாகமங்களும் புராண இதிகாசங்களும் கூறுகின்றன. இங்கே திதிக்கே முக்கியம் கொடுக்கிறார்கள்.

ஆங்கயால், சைவ மக்களாகிய நாம் நன்குணர வேண்டும். இது 8 இரவோ, 9 இரவோ அல்லது 10 இரவோ வரக்கூடும். இது திதியின் பிரமாண ஏற்றத் தாழ்ச்சியினாலே ஏற்படும் வித்தியாசமாகும். இதற்கு முன்பு 10 இரவுகள் வந்த சில வருடங்கள் இங்கு உதாரணத்துக்கு காட்டப்பட்டுள்ளதை சைவமக்கள் அவதானிக்க வேண்டும்.

**எனவே, வேதாகம முறைப்படி சர்வ சித்து வருடம் புரட்டாதி மாதம் 24ஆம் திகதி (11.10.2007) வியாழக்கிழமையே நவராத்திரி விரதாரம்பமாகும்.**


**இ.வெங்கடேச ஐயர்**
*(சோதிட பரிபாலன மடம் கொக்குவில்)*



[illegible]த்திலிருக்கும் நயினாமலை வரதராஜப் பெருமாள் கோயிலில் புரட்டாதிச் சனிதோறும் முட்படுக்கையில் படுத்து நேர்த்திக்கடனைச் செலுத்தும் பக்தர்களில் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**சோமசுந்தரம் பரமசிவராசா**
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தரம்- I)
அவர்கள் 03.10.2007 இல் 247 நல்லூர் பிரதேச மத்தியஸ்தர் சபையின் யாழ்ப்பாணம் நீதி, நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இதையிட்டு அவரை மனதார வாழ்த்துவதுடன், அவரின் சேவை பல்லாண்டு காலம் தொடர இறைவனை வேண்டுகின்றோம்.

**மீனாட்சி நகைமாடம்,** *கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,*
வேம்படி சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை, *கந்தர்மடம்,*
கந்தர் மடம் தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.

(66650)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 | 21 |
| 07 | 09 |
| 1960 | 2006 |

அமரர் **ஐயாத்தம்பி குமாரகுலசிங்கம்** *(குமார்)*
திதி: 09.10.2007

குமார் என்று அழைத்திடக் குதித்தோடி வருவாயே!
நாயகனென்றே நானழைக்க வலமிருக்கும் தெய்வமே!
அப்பா! என்றே கூப்பிட அருகிருக்கும் அப்பாவே!
குருதியெல்லாம் உறைந்திட்ட குணக்குன்றே கணவானே!
பிறருக்கு உதவிடப் பின்னில்லாப் பெரியோனே!
தஞ்சமென்று வந்தோரைத் தரணியிலே காத்து நின்றாய்
அன்பினால் அணைத்திட்ட அன்பின் உருவமே!
பிஞ்சுக் குழந்தைகளைக் கட்டிய மனைவியை
அன்புப் பெற்றோரை நல்ல அயலவரை விட்டு
நெடுந்தூரம் சென்று ஒரு வருடமாகின்றதே!
ஆறாத் துன்பத்தால் துடித்தே நிற்கின்றோம்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை வணங்குகின்றோம்.

*தற்போதைய முகவரி:*
பந்தாவத்தை, இவவாலை.
*நிரந்தர முகவரி:*
விடுவளை, எழுதுமட்டுவாள்.

**பெற்றோர், மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள், மைத்துனர், நண்பர்கள்.**

(66649)

## முதலாம் ஆண்டு நினைந்துருகல்



**தோற்றம்**
02 ★ 10 ★ 1964

**மறைவு**
21 ★ 09 ★ 2006

புன்னாலைக்கட்டுவன்
அமரர் தர்மலிங்கம் பரமேஸ்வரி தம்பதியரின்
கனிஷ்ட புதல்வன்

### அமரர் தர்மலிங்கம் முரளிதரன்

அவர்களின் நினைவு நாள்
திதி: 09.10.2007

ஓயாத கண்ணீரைச் சிந்திச் சிந்தி
உருகுகின்றோம் உன் பிரிவால் எங்கள் செல்வா!
பாயாத நீரெல்லாம் பாய்ந்தே ஏற்றி
புலம்புகின்றோம் தம்பியே இங்கு நாமும்
காயாத முழுநிலவே! கற்பகமே! எம்மை விட்டு
போனதுமேன், அன்பு சொரிந்தெம்மை யேற்று
வாயார புகழ்ந்தவனே துயரம் மிஞ்ச
வயிற்றிலடித் தழுவதையும் காண்கிலேயோ.

புதுவாயர் கோவிலடி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
சுன்னாகம்.

எந்நாளும் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**- குடும்பத்தினர்.**

(66540)

## திருகோணமலையில் இளைஞர் கடத்தல்

கொழும்பு, ஒக்.9

திருகோணமலை துவரங்காட்டுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணியளவில் வெள்ளைவானில் வந்தனர் எனக் கூறப்படும் இனந்தெரியாத நபர்களினால் தமிழ் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த சுந்தரராஜ் சூரியராஜ் (வயது - 26) என்ற இளைஞனே கடத்தப்பட்டவராவார்.

இந்த இளைஞன் தனது வீட்டுக்கு முன்னால் நின்று கொண்டிருந்த வேளையிலேயே கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக உப்பு வெளிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய் யப்பட்டிருக்கிறது. (சி)

## நவாலியில் மருத்துவ முகாம்

நவாலி, ஒக்.9

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், நவாலி முருகானந்தா மகளிர் முன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் மருத்துவ முகாமொன்றை நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் நடத்தியது.

இம் முகாமில் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவையும் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு கண் பரிசோதனையும் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. (203-100)

## நவாலி கலையரசு வீதி சேதம்

நவாலி, ஒக்.9

நவாலி கலையரசு வீதி போக்குவரத்துச் செய்ய முடியாது படுமோசமான நிலையிலுள்ளதால் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்த வீதியை கடந்த வருடம் சண்டிலிப்பாய் பிரதேச சமுர்த்திப் பிரிவினர் பொறுப்பேற்றுப் பாரிய கற்களையும் மண்ணையும் கொட்டித் திருத்தியமைத்தனர்.

ஆனால் மக்கி, மண் என்பன வெள்ளத்தினால் அள்ளிச் செல்லப்பட்டதால் பாரிய கற்கள்தான் அந்த வீதியெங்கும் பரவிக் கல்லு வீதியாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் மக்கள் இவ்வீதியால் நடந்து செல்லவோ வாகனங்கள் மூலம் செல்லவோ முடியாமல் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். (203-100)


### நாய் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பெட் ஆறு மாத குட்டி மற்றும் (தாய்நாய்) 2 1/2 வயது நாயும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- அன்னங்கை, உரும்பிராய் மேற்கு.
T.P. 0662213066
0776519521.
(66664)

### தவறிவிட்டது

N.I.C இல.617481758V சுப்பிரமணியம் சரோஜினி என்பவரது தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், (04.10.2007) வியாழக்கிழமை திருநெல்வேலி சந்தைச்சுற்றாடலில் முக்கிய ஆவணங்களுடன் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் [illegible] தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க.சந்திரசேகரம், சந்திரன் கடை,
T.P. 4591223 பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு.

### கமலக்கண்ணன் திருமண சேவை

75 ஆம் ஆண்டு, ஜேர்மனி, 75 ஆம் ஆண்டு, லண்டன், 75,76,77,78 ஆம் ஆண்டு லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமக்கள் எம்மிடம் உள்ளனர். அத்தோடு பாவம் கூடிய அரச உத்தியோக மணமக்களும், பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் மேலும் டாக்டர், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்களும் எம்மிடம் உண்டு. தொடர்பு:- 171/7, மனோன்மணி, அம்மன் வீதி, நல்லூர். T.P. 0776070862, 0775925455.

### விற்பனைக்கு

• ஏழாலை மேற்கு, தீபனா கொமினிக்கேஷன் வீதியில் 2 1/2 பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு. 4 அறை, 2 கோல், வரவேற்பறை என்பவற்றுடன் கிணற்று வசதிகளுடன் கூடிய நிலையில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டியது:
உதயசூரியன் சனசமூக நிலைய லேன், ஏழாலை மகாவித்தியாலயத்தடியிலுள்ள நிரோஷா வீடியோ சென்ரர், ஏழாலை மேற்கில் தொடர்பு கொள்ளலாம்.
T.P. 0776671869. (66669)

### கோழிக் குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
* றாஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* ஸ்ரீ வித்ஜா றேடேர்ஸ்- அச்சுவேலி
* மதுரா- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம்- சிவலிங்கப் புளியடி
* P.ரவி- சாவகச்சேரி
* தாரகை- முதலாம்கட்டை, பருத்தித்துறை


T.P. No. 222 3529, 222 2867

### கடை வாடகைக்கு விடப்படும்

348, K.K.S.Road, யாழ்ப்பாணம் முகவரியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்பட உள்ளது. (சிவன் கோயிலுக்கு அருகில்) வாடகை பேசித் தீர்க்கப்படும்.
தொடர்பு: திருமதி பா.சுபோதினி
026- 2224922
திருமதி சு.சரவணபவன்
[illegible]
யாழ்ப்பாணம்.
[illegible]


## ஏழாம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
**கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**
மண்மகிழ
05*11*1948

செல்வி
**தமிழரசி யோகலிங்கம்**
மண்மகிழ
23*05*1975

கண் நெகிழ:26*09*2000

*திதி:- சதுர்த்தசி (09.10.2007)*

நிலையற்ற தரணி வாழ்வில்
நீறாகிப் போனவர்களே....
கொடிய ஷெல் அரக்கன் – உமை
கொன்றொழித்து ஏழாண்டுகள் சென்றதுவோ?
ஏழல்ல ஏழுநூறு ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*சந்தை வீதி,*
*கொடிகாமம்.*

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

(66675)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



| முத்தாக | வித்தாக |
|---|---|
| 22 | 26 |
| 10 | 09 |
| 1954 | 2000 |

### திருமதி கலைமணி இராசதுரை

அம்மா! அம்மா! எங்கள் தெய்வமே!
அன்போடு அரவணைத்து வளர்த்த அம்மாவே!
ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும் -எமக்கு
ஆறுதல் கூற யாருமின்றி ஒரு நொடியில் சென்றீர்களே?
அநாதையாக ஏழு பிள்ளைகளையும் தவிக்கவிட்டுச் சென்று
ஆண்டுகள் ஏழு ஆனதம்மா!
ஒரு முறையேனும் எங்களைக் காண
ஓடோடி வரமாட்டீர்களா?
என்றும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*குடமியன்,*
*வரணி.*

பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

(66644)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 27 | 09 |
| 03 | 09 |
| 1945 | 2007 |

### அமரர் சோமசுந்தரம் சிவக்கொழுந்து

09.09.2007 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தோருக்கும் மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (09.10.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
**க.பாலன்.**
0602212226.

(66661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வரவு - செலவுத் திட்டத்தோடு வரப்போகும் யுத்தத் தீவிரம்

இலங்கை அரசின் யுத்த தீவிரத்தை நிரூபிப்பதுபோல அதன் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டமும் 'யுத்த பட்ஜெட்' ஆகவே அமையப் போகின்றது என்பதற்கு கட்டியம் கூறும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்த வருடம் பாதுகாப்புச் செலவினத்துக்காக சுமார் பதினான்காயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர் குறை நிரப்புப் பிரேரணைகள் மூலம் மேலும் நிதி அவ்வப்போது படைத்துறைக்குக் கொட்டப்பட்டது.

அடுத்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவினத்துக்கு இப்போதைக்கு பதினாறாயிரத்து அறுநூற்று நாற்பது கோடி ரூபா ஒதுக்கப்படவிருக்கின்றதாகத் தெரிகின்றது. அரசின் அடுத்த ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத்திட்ட மதிப்பீட்டு விவர அறிக்கை நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அதிலேயே இந்த ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பும் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டை விடவும் 2007 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுததிட்டத்தில் பாதுகாப்புச் செலவினத்துக்கு நாற்பது வீத நிதி அதிகரிப்புச் செய்யப்பட்டது. அப்போதே இந்த அரசின் உள் நோக்கம் யுத்த தீவிரம்தான் என்பது தெளிவாகிவிட்டது. அதை உறுதிப்படுத்துமாற்போல இம்முறை அது மேலும் சுமார் இருபது வீதத்தால் அதிகரிக்கப்படுகின்றது. யுத்த சன்னதத்தில் ஆவேசம் கொண்டு நிற்கும் தென்னிலங்கை அரசுப் படைகள் கொடூரப் போர் ஒன்றைத் தமிழர் தாயகத்தின் மீது - குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பின் மீது தொடுப்பதற்கு முனைந்து நிற்கின்றன என்பது தெளிவு.

அத்தகைய கொடூரப்போர் தொடுக்கப்படும்போது பாதுகாப்புத் துறைக்குத் தேவைப்படும் மேலதிக நிதியை அவ்வப்போது குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் அரசு - நாடாளுமன்றம் வாயிலாக - பெற்றுக் கொடுக்கும் என்பதும் தெரிந்த விடயமே. அதுவே கடந்த காலத்திலும் இடம்பெற்றுவந்த வழமையாகிவிட்டது.

எனவே, அடுத்த ஆண்டுக்கான யுத்தச் செலவினமாக இப்போதைக்கு 16 ஆயிரத்து 640 கோடி ரூபா காட்டப்பட்டாலும் அது, யுத்தம் தீவிரம் அடைய, அடைய மென்மேலும் உயரும் என்பது திண்ணம்.

இத்தகைய யுத்தத் தீவிரப் போக்கால் நாட்டின் வளத்தையும், பொருளாதாரத்தையும், சக்தியையும் வீணாக்கி, மோசமான வருமானநெருக்கடியை உருவாக்கியிருக்கும் இந்த அரசுத்தலைமை, இதன் காரணமாக, மக்கள் வயிற்றில் அடித்துள்ளது. விலைவாசி எகிறி, வாழ்க்கைச் செலவு கட்டுமட்டில்லாமல் உயர்ந்தது. அப்பாவி மக்களை 'அன்றாடம் காய்ச்சிகளாக' வாழ்வதற்குக் கூட இடமில்லை என்ற நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

இதனால் கொதித்துப்போயுள்ள தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு யுத்த வெறியை ஊட்டி, போர்முனை வெற்றிகளை போதைதரும் அறிவிப்புகளாக வெளியிட்டு, சமாளிக்கலாம் என்பது அரசின் திட்டம்.

இந்த அடிப்படையில் ஒருபுறம் தென்னிலங்கை மக்களைத் திசை திருப்புவதற்காக யுத்த வெற்றிகள் பற்றிய அறிவிப்புகளை வெளிப்படுத்த வேண்டிய இக்கட்டு இந்த அரசுத் தலைமைக்கு.

மறுபுறம், இவ்வாறு பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்திய பின்னணியில் அரசுத் தலைமையால் அடுத்த மாத முற்பகுதியில் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் வரவு - செலவுத்திட்டத்தை அங்கு அங்கீகரிக்கச் செய்யவேண்டிய கட்டாயமும் உண்டு.

வரவு - செலவுத்திட்டத்தில் தோற்றால் மஹிந்தவின் இந்த அரசுவீட்டுக்குப் போக வேண்டியதுதான். வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றுவதாயின் தற்சமயம் நாடாளுமன்றில் மதில்மேல் பூனையாக இருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியை எப்படியும் தனது வலைக்குள் அரசுத் தலைமை வளைத்துப்போட வேண்டும். நாடாளுமன்றத்தில் கட்சிகளின் ஆசனங்கள் தொடர்பான அட்சர கணிதத்தில் ஏற்கனவே இந்த அரசுத் தலைமை அல்லாடுகின்றது. வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க ஜே.வி.பி. இணங்கினால், அதை வைத்துக்கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இதர சிறிய கட்சிகளின் ஆதரவைத் திரட்டி, வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தோற்கடித்துத் தனது இந்த அரசைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. வீட்டுக்கு அனுப்பிவிடும். அதற்காக அக்கட்சி தலையால் கிடங்கு கிண்டவும் தயார் என்பது அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியாததல்ல.

ஆகவே, வரவு - செலவுத் திட்ட சமயத்தில் தமது அரசுக்கு எதிராக ஜே.வி.பி. அரசியல் போர்ப் பிரகடனம் செய்யாமல் இருப்பதற்காக - அதற்கான அரசியல் காய் நகர்த்தலாக - தமிழர் தாயகத்தின் மையப் பூமியான வன்னித் தளம் மீது முழு அளவில் போர்ப்பிரகடனம் செய்யத் தயாராகி வருகிறார் ஜனாதிபதி மஹிந்தர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் சமயத்தில் -

வன்னிப் பெருநிலப்பரப்பைப் புலிகளிடமிருந்து கைப்பற்றுவதற்கான பெரும் படையெடுப்பு நகர்வு ஒன்றை அரசுப் படைகள் ஆரம்பித்து, முழு மூச்சுடன் முன்னெடுக்குமாயின் -

அத்தகைய யுத்த நகர்வுத் திட்டத்தை ஊக்குவித்து, பௌத்த - சிங்கள மேலாண்மையை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகப் போராடும் அரசைக் கவிழாமல் காப்பாற்ற வேண்டும் என்ற 'சிங்கள - பௌத்த தேசிய வாதக் கடப்பாட்டை' முன்னிறுத்தி, இந்த அரசுக்குச் சார்பாக நாடாளுமன்றத்தில் செயற்பட முடியும் என்பதை ஜே.வி.பி. ஏற்கனவே அரசுத் தலைமைக்குக் கோடி காட்டிவிட்டதாகக் கொழும்புப் பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது அரசியல் இருப்புக்கும் அரசின் ஸ்திரத்துக்கும் தமிழர் தேசம் மீதான யுத்த வெறித் தீவிரம் என்ற ஒரேயொரு துரும்புச் சீட்டை - ஒரு வழியில் கூறுவதானால் துருப்புச் சீட்டை - வைத்திருக்கும் மஹிந்த அரசு, தனது அரசின் மிக நெருக்கடியான விவகாரமான - நாடாளுமன்றத்தில் வரவு, செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கச் செய்யும் - அரசியல் இலக்கை எட்டுவதற்காக யுத்தத்தை ஒரே வழிமுறையாகப் பயன்படுத்தப் போகின்றது.

அரசின் அரசியல் இலக்கை அடையவும் அரசின் இருப்பை உறுதிப்படுத்தவும் நாட்டின் யுத்தத்தைக் கருவியாக்கும் மஹிந்தரின் தலைமை; அதற்காக இந்த வரவு - செலவுத்திட்ட சமயத்தில் தமிழர் தாயகம் மீது பெரும் யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைந்து, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயலப் போகின்றது என்பதே அரசியல் ஆய்வாளர்களினதும், அவதானிகளினதும் எதிர்பார்ப்பு.

ஆக, இலங்கைத் தீவில் பெரும் யுத்தம் வெடிக்கப்போகின்றது என்ற பீதியில் உறைந்திருக்கும் மக்கள், அது எப்போது என்ற அச்சம் கலந்த அங்கலாய்ப்போடு அல்லாடுவது தெரிகின்றது.

நாடாளுமன்ற நகர்வுகளுக்கு ஏற்றவாறு வரவு - செலவுத் திட்ட சமயத்தில், தென்னிலங்கை பௌத்த - சிங்கள மேலாதிக்க சக்திகள் எல்லாம் நாடாளுமன்றில் அரசுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்க வைக்கும் விதத்தில், யுத்த நகர்வுகளும் ஆரவார அறிவிப்புகள், பிரசாரங்கள், பரப்புரைகளோடு முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

# தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக பாரிஸில் தமிழர்கள் நடைபவனி



பாரிஸ், ஒக்.09

இலங்கையின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் தமிழர்கள் நேற்று முன்திணம் நடைபயணம் மேற்கொண்டனர்.

பாரிஸின் புறநகர்ப்பகுதியான லாக்கூர்நோவ், நகரசபை முன்றலில் இருந்து, காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நடைபயணம், பாரிஸின் பொலிஸ் நீதி நிர்வாகத்துறைத் தலைமையகங்கள் அமைந்துள்ள, மையப் பகுதியூடாக மதியம் 11.30 மணியளவில் சென்றபோது அவர்களை வழி மறித்த, பிரெஞ்சுப் பொலிஸார், பாரிஸின் மத்திய பகுதி சன நெருக்கடி கூடிய பகுதியாக இருப்பதால், சிறிது தூரம் ரயிலில் சென்று, புறநகர் பகுதியில் இருந்து, மீண்டும் பயணத்தைத் தொடருமாறு வேண்டுகோள் விடுத்தனர். அதனை ஏற்றுக்கொண்ட மக்கள் அவ்வாறே சிறிதுதூரம் ரயிலில் சென்று, பின்னர் தமது நடைபயணத்தைத் தொடர்ந்தனர்.

பொலிஸாரின் பாதுகாப்புடனும், வழித்துணையுடனும் மீண்டும் யோன்தி ரயில் நிலையத்தில் இருந்து, பிரான்ஸ் சிறைச்சாலை நோக்கி நடைபயணம் தொடர்ந்தது. மதியம் 1.30 மணியளவில் பிரெஞ்சு நகர சபை உறுப்பினரின் உரையுடன் நடைபயணம் நிறைவுபெற்றது.

பிரெஞ்சு சட்டங்களுக்கு உட்பட்டு செயற்பட்டுவரும் தமிழர்களின் ஒழுக்கத்தை மீண்டும் பறைசாற்றும் வகையில், இந்த நிகழ்வு நடைபெற்றதாக நகரசபை உறுப்பினர் தெரிவித்தார்.

25 கிலோ மீற்றர்களுக்கு மேல் நடந்து வெற்றிகரமாக நடைபெற்ற இந்த நடைபயணத்தில் பல்லாயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் பிரெஞ்சு மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. இது போன்ற போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்கள். இந்த நடை பவனியில் நூற்றுக் கணக்கான தமிழ்மக்கள் கலந்து கொண்டனர். (சி)

## வலி.தெற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

வலி.தெற்கு பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று முற்பகல்10.30மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச விவசாயக்குழுக் கூட்டமும் இன்று முற்பகல்11.30மணிக்கு இடம்பெறும் என்று பிரதேச செயலாளர் ரி.மஞ்சுளாதேவி அறிவித்துள்ளார். (அ-1)

## சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பஸ்தர் சிலாபத்தில் கடத்தப்பட்டு சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்,ஒக்.9

சாவகச்சேரி,கல்வயலைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் சிலாபம் பகுதியில் இனம்தெரியாதோரால் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப் பட்டுள்ளதாக உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேஇடத்தைச்சேர்ந்த கார்த்திகேசு செல்வேந்திரன் (வயது42) என்பவருக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

அவர்சிலாபம் உடப்புப் பகுதியில் நீண்டகாலமாக மீன்வாடிவைத்து நடத்தி வந்தார்.கடந்த வெள்ளிக்கிழமை ஒருகோஷ்டி வீட்டிலிருந்து அவரைக் கடத்திசென்றதாகவும் அதன்பின்னர் சிலாபம் கடற்கரைப்பகுதியில் கண்கள் கட்டப்பட்டுசுடப்பட்ட நிலையில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

இவருடன் மற்றொரு தமிழரின் சடலமும்கடற் கரையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-207)

## சாரதி அனுமதிப்பத்திரம்: பரீட்சைத் திகதிகளை இன்றுமுதல் பெறலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.9

சாரதிஅனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்துமற்றும் செயல்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்களை இன்று முதல் செயலக மோட்டார் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகநாள்களில் நண்பகல் 12மணிக்கு முன்னர் சமுகம்தந்து பரீட்சைக்கானதிகதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் கேட்டுள்ளார். (1)

## வர்த்தக நிலையங்களின் விவரங்கள் சேகரிப்பு

உடுப்பிட்டி,ஒக்.9

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.பொலிகண்டி, நவிண்டில் வீதியில் உள்ளவர்த்தக நிலையங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகளின் விவரங்களைப் படையினர் கடந்த சில தினங்களாகத் திரட்டிவருகின்றனர்.

படையினர்தாமே நேரில் சென்று கடைகளின் பெயர் விவரம், உரிமையாளரின் விவரம்என்பன வற்றைப் பதிந்துசெல்கின்றனர்.

எதற்காக இந்தப்பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றவிவரம் தெரியவரவில்லை. (அ-155)

## கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை

யாழ்ப்பாணம்,ஒக.09

இரும்புப் பொட்டகம் ஒன்றுக்குரிய திறப்புக் கோர்வைஒன்று வாடிக்கையாளர் ஒருவரினால் கண்டெடுக்கப்பட்டு இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு உரிமைகோருபவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாமென உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.(1)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 23 | :புதன்கிழமை 10.10.2007 |
| திதி : சதுர்த்தசி | மு.ப. 8.36 |
| நட்சத்திரம் : | உத்தரம் மு.ப. 8.29 |
| | அமாவாசை விரதம் |
| சுபநேரம் | : 04.32 - 06.02 |
| ராகுகாலம் | : 12.02 - 01.32 |

முளைத்தநெல் கருகும் அபாயம்

## தென்மராட்சிப் பகுதி விவசாயிகள் மழைவேண்டி ஆலயங்களில் பூசை

யாழ்ப்பாணம்,ஒக்,09

தென்மராட்சிப் பிரதேசத்தில் மழைவேண்டி ஆலயங்கள் பலவற்றிலும் பூசைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்தமாதம் மழைபெய்ததையடுத்து கமக்காரர் வயல்களில் நெல் விதைத்திருந்தனர். அவை முளைத்துக் காணப்படுகின்றன ஆனால் நீண்ட நாள்களாக மழை பெய்யவில்லை. இதனால்முளைத்துள்ளநெற்பயிர்கள் அழிந்துபோகும் பெரும் அபாயநிலை தோன்றியுள்ளது.

விதைநெல்லுக்குத் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் முளைத்துள்ள பயிர்கள்அழிவடைந்தால் மீண்டும் விதைப்பதற்கு விதைநெல் எடுக்க முடியாமல்போகலாமெனவும் நெற்செய்கையாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதனால் மழைவேண்டி ஆலயங்களில் விசேடபூசைகளைத்தாம் நடத்தி வருவதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (அ-1-207)

## முஷாரப் பதவி ஏற்பது குறித்த முடிவு இம்மாதம் 17 ஆம் திகதியே தெரிய வரும்

இஸ்லாமாபாத், ஒக்.09

பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் தொடர்ந்து நீடிக்க முடியுமா இல்லையா என்பது இம்மாதம் 17 ஆம் திகதியே அந்நாட்டு உச்ச நீதிமன்றம் இது குறித்து எதிர்வரும் 17ஆம் திகதியே தீர்ப்புக் கூறவுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் அபார வெற்றிபெற்றிருக்கும் முஷாரப், இத்தீர்ப்புக்காக காத்திருக்கிறார்.

பாகிஸ்தான் இராணுவத் தலைமைத் தளபதியாக இருந்த பர்வேஸ் முஷாராப் 1999ஆம் ஆண்டில் இராணுவப் புரட்சியை ஏற்படுத்தினார். அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப்பை நாடு கடத்தி, அதிரடியாக ஆட்சியைக் கைப்பற்றினார். நாட்டின் தலைமை அதிகாரியாக தன்னை அறிவித்துக் கொண்டார். 2001இல் நாட்டின் ஜனாதிபதியாகவும் தன்னைப் பிரகடனம் செய்தார். அடுத்த ஆண்டில் நாடு முழுவதும் கருத்துக்கணிப்பு நடத்தி ஜனாதிபதிப் பதவியை 5 ஆண்டுகளுக்கு நீடித்துக் கொண்டார்.

அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையடுத்து, பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தல் கடந்த சனிக்கிழமை நடந்தது. நாடாளுமன்ற மக்களவை, செனட் சபை, நான்கு மாகாண சட்டசபை உறுப்பினர்கள் தேர்தலில் வாக்குப் போட்டனர். இதில் 671 வாக்குகளைப் பெற்று முஷாரப் வெற்றிபெற்றார்.

இந்நிலையில்,ஜனாதிபதிப் பதவியை முஷாரப் 2ஆவது முறையாக வகிக்க முடியுமா என்று சர்ச்சை எழுந்துள்ளது. இதுகுறித்த தீர்ப்பை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதி வழங்கவுள்ளது. அதுவரை தேர்தல் முடிவை அதிகாரபூர்வமாக அறிவிக்கவும் உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அன்றைய நாளில்தான் முஷாரப்பின் வெற்றியும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது. அவர் வெற்றிபெற்றமை செல்லுபடியாகுமா? மீண்டும் ஜனாதிபதியாவாரா? என்றும் அன்றுதான் தெரியவரும். நேற்று திங்கட்கிழமை அந்த தீர்ப்பு வழங்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்ட போதிலும் 17 ஆம் திகதியே வழங்கப்பட உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர்காயமுற்றனர் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை

பக்கிமுட்டியா காட்டுப்பகுதியில் படையினர் தேடுதல் நடத்திய போது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்என்றும் அதன் பின்னர் கிளைமோர் தாக்குதலை நடத்தினர் என்றும் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் அதிரடிப்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் ஊர்காவலரும், அதிரடிப்படை வீரர் ஒருவரும் காயமடைந்தனர் என்றும் - படைத்தரப்பு மேலும் தெரிவித்தது. (அ-1)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- என்று படைத்தரப்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

எனினும்சம்பவம்தொடர்பாகவிடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எவையும் நேற்றுமாலை வரை கிடைக்கப்பெறவில்லை.(எ)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் தனபாலசிங்கம்

சாவகச்சேரி, தபால்கந்தோர்வீதியைப்பிறப்பிடமாகவும் தபால்பெட்டிஒழுங்கை,உரும்பிராய்கிழக்கை வசிப்பிடமாகவும்கொண்ட இரத்தினம் தனபாலசிங்கம் நேற்று (8.10.2007) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்- கனகமணி தம்பதியரின் அன்புமகனும் பொன்னையா- லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சத்தியதேவியின் அன்புக்கணவரும் அகல்யா(யாழ்.இந்துமகளிர்கல்லூரி), அகிலன்(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), அருண் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற மனோகரன், விமலாதேவி(கனடா), தனலட்சுமி (கனடா), இந்திராணி (சாவகச்சேரி) ஆகியோரின் சகோதரரும் பத்மாவதி (சாவகச்சேரி), பீதாம்பரம்(கனடா), சிறிகாந்தா(கனடா), லயன் கா.சற்குணதேவன்(ஜே.பி,சாவகச்சேரி) ,மகாதேவன் (ப.நோ.கூ.ச -சாவகச்சேரி), சறோசினிதேவி, மகாலிங்கம் (லண்டன்), சத்திய ராணி, சிவராசா, சேனாதிராசா ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல்3.30மணிக்கு நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
லயன் கா.சற்குணதேவன்.

## திருமதி இராசம்மா தம்பிஐயா



சுன்னாகம்,மூர்த்தியாங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிஐயா நேற்று (08.10.2007) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான கதிரிப்பிள்ளை - குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர்களான சின்னக்குட்டி - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பிஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஆறுமுகம், திருமதி நல்லம்மா விஜயன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஸ்ணகுமாரி(ஜேர்மனி), கிருஸ்ண லீலா, கிருஸ்ணபவானி, தயாபரன்(இங்கிலாந்து), தயாளன், சுபாசினி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மகாலிங்கம்(ஜேர்மனி), செல்வநாயகம், விவேகானந்தன், மாட்டினா(இங்கிலாந்து), சுதாயினி, சத்தியமூர்த்தி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் விநோத், மியூரா, மிதுசா, மாதங்கி(ஜேர்மனி), சஜீவன், தாக்சாயினி(மாணவர்கள், ஸ்கந்த வரோதயக் கல்லூரி), ராறா, மைக்கல், றீஸ், கிரன், ஸோான், அஸ்லி(இங்கிலாந்து), நிசாந்தன், சுகுணன், றஜிந்தன்(மாணவர்கள், மகாஜனக் கல்லூரி), கிரிசாந், நிருசாந்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.10.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூர்த்தியாங்கூடல்,
சுன்னாகம். (66718)

தகவல்:
சி.தம்பிஐயா (கணவர்)

## சபாபதி பஞ்சாட்சரம் (பத்தர்)



யாழ்ப்பாணம், தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும், தற்போது இந்தியாவில் வசித்தவருமான சபாபதி பஞ்சாட்சரம் அவர்கள் நேற்று (08.10.2007) திங்கட்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் விஜயலட்சுமின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாபதி(பத்தர்)-அன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற பூமணியின் சகோதரனும் காலஞ்சென்ற வேலாயுதம், கனகரத்தினம் பத்தர் ஆகியோரின் மைத்துனரும் தவலெட்சுமி, புஸ்பராணி, பஞ்சகுமார், கணேசகுமார், சிவகுமார், ராஜ்குமார், நந்தகுமார், செல்வகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேந்திரராஜா, ஞானகுமாரன், நவமலர், கமலாதேவி, நிமல்கா, இரேனா, பிஷாந்தினி ஆகியோரின் மாமனும் கௌசல்யா, கஜனி, ஜெனாத்தன், ஜசிந்தா,நிவேதா, லக்ஸ்மன், சாஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11 (21 புதியது) முதலாவது மாடி,
2ஆவது தெரு,V.C கார்டின் மந்தவெளி,
சென்னை 600028. இந்தியா.
தொ.பே. 00914424954090

தகவல்:
க.நவநீதன் (மருமகன்)
628/3, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி.

## போர் நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண.தம்பரமில தேரர், பொதுச்செயலாளர் அத்தனயாலே சமிந்திர தேரர் கையப்பமிட்டு அனுப்பிய அந்தக்கடிதத்தின் விவரம் வருமாறு:

விடுதலைப் புலிகளின் சர்வதேச முகவர்களாக வெளிநாட்டு நிறுவனங்கள் செயற்படுகின்றன என ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தோம். அது இன்று நிதர்சனமாகியுள்ளது.

ஐஸ்லாந்து இராஜதந்திரியை வன்னிக்கு அழைத்துச் சென்று விடுதலைப் புலிகளை சந்திக்க வைத்த கண்காணிப்புக்குழு இதனை மீண்டும் உறுதி செய்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட நாட்டைக் காட்டிக்கொடுக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை காரணமாகவே கண்காணிப்புக்குழு அத்துமீறிச் செயற்படுகின்றது. இந்த உடன்படிக்கையை தொடராவிட்டதால் அரசு இக்குற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### ஈழப்பிரகடனத்துக்கு ஆப்பு வையுங்கள்

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் மிகவும் மென்போக்கில் கருத்தினை வெளியிட்டுள்ளார். கண்காணிப்புக் குழுவின் வாகனங்களை சோதனையிட வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. இறைமையுள்ள நாட்டில் அரசு உடனடியாக முடிவுகளை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அரசு மீது மக்கள் விமர்சனங்களை வெளியிட நேரிடும்.

புலிகள் ஈழத்தைப் பிரகடனம் செய்து அதனை உறுதி செய்து சட்டரீதியாக வெளியிடும் வரை காத்திராமல் உடன் காத்திரமான நடவடிக்கை எடுத்து ஆப்பு வைக்கவேண்டும்.

ஐஸ்லாந்து இராஜதந்திரி வன்னி சென்றமைக்கு பாதுகாப்புச் செயலளராக கடமையாற்றும் நீங்களும் பாதுகாப்பு அமைச்சும், பாதுகாப்பு அமைச்சரும், சமாதான செயலகப் பணிப்பாளர் அலுவலகமும் வெளிநாட்டமைச்சும் அத்தோடு விமானசேவைகள் தொடர்பான அதிகாரிகளுமே பொறுப்பாளிகள் - என்றுள்ளது.(அ-சி)

## நிதி மோசடிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருக்கின்றார் என்று அவருக்கு அடுத்த நிலையில் உள்ள அணி முக்கியஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நிதி மோசடி உட்பட வேறு சில விடயங்களில் கருணா மீது அதிருப்தியடைந்திருந்த அந்த அணியின் மற்றொரு முக்கியஸ்தரான பிள்ளையான் என்பவர் சமீப காலமாக தலைமையோடு முரண்பட்டுக் கொண்டிருந்தார் என்றும், சில உறுப்பினர்களையும் கூட்டிக்கொண்டு அவர் பிரிந்து தனிவழி போய்விட்டார் என்றும் பல்வேறு விதமாக தகவல்கள் வெளியாகி வந்தன.

### பிரிட்டனுக்கு தப்பிவிட்டாரா?

இது இப்படியிருக்க, இராணுவத்தினரின் பாதுகாப்புடன் கொழும்பில் தங்கியிருந்த கருணா பிரிட்டனுக்கு தப்பி ஓடிவிட்டார் என்று கடந்த சில நாள்களாக பேச்சுகள் அடிபட்டன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மட்டக்களப்பில் ஏறிக்கரை என்ற இடத்தில் கருணா குழுவின் மத்திய குழு கூடி நிலைமையை ஆராய்ந்தது.

அந்தக் குழுவின் அதிருப்தியாளர் என்று கருதப்படுகின்ற பிள்ளையானும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

அப்போது நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்காக கருணாவை தமது அணியிலிருந்தும், தலைமைப் பொறுப்பிலிருந்தும் இடைநிறுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டதாகவும் - பின்னர் புதிய தலைவராக பிள்ளையான் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் என்றும் அதன் பேச்சாளர் அசாத் மௌலானா என்பவர் தெரிவித்தார். (சி)


NEW A.A.C. கல்விநிறுவனம் சுன்னாகம்

ENGLISH SPOKEN AND GRAMMAR

By: BRITTO

புதியபிரிவு ஆரம்பம்:11.10.2007
(வியாழன்,வெள்ளி வகுப்புகள்) நேரம்-10.30.

இடம்: NEW A.A.C . கல்வி நிறுவனம், சுன்னாகம்.

வெகுவிரைவில் ...

SPOKEN ENGLISH WITH GRAMMAR

By: BRITTO

Tue, Fri 2.30 - 3.30PM

அனுமதிகளும் மேலதிகதகவல்களும் அலுவலகத்தில்

A.C.A கோவில் வாசல், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

தேவை

கணனி வேலை தெரிந்தவர் (Type Setting)
தேவை. நேரில் வரவும்.
கற்பகம் கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## அநாமதேயத் தொலைபேசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தஅறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

கடந்தசில தினங்களாக யாழ்.குடாநாட்டில் பல்வேறுபட்ட துறைகளில் கடமைவகிக்கும் உயர்அதிகாரிகளுக்கும், சமூகத்தில் மதிப்பளிக்கப்படுபவர்களின் வீடுகளில் உள்ள தொலைபேசிகளுக்கும் இனந்தெரியாதவர்கள் அழைப்புக்களை ஏற்படுத்துவதாக அறியவந்துள்ளது. தொடர்பை எடுத்தவர்கள்இது பலாலி இராணுவ முகாமில்இருந்துஎன்றுகூறி அப்பாவியான நபர்களிடம் கப்பமாகப்பணம் கேட்டுள்ளனர்.

இப்படியான தொலைபேசி அழைப்புக்கள் மூலம் பாதுகாப்புப்படையினர் பணம்கேட்டிருப்பார்களா என்றுபுத்திசாலித்தனமான பொதுமக்கள் முடிவெடுப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்காது. இவ்வாறான பொய்பிரசாரங்கள்சம்பந்தமாக நம்பிக்கைகொள்ளும் அளவிற்கு அப்பாவியான பொதுமக்கள் ஆயத்தமாகவில்லை என்றுதெரியப்படுத்துவதுடன் யாழ்ப்பாண மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் உள்ளநம்பிக்கையான ஒற்றுமைத்தன்மையை சீர்குலைக்க எடுக்கப்படும் உண்மைக்குப்புறம்பான முயற்சிஇதுஎன்று தெரியவந்துள்ளது.

நாங்கள் நாட்டின் பாதுகாப்புப்படைஎன்பதால் உங்களுக்காகவும் உங்கள்பாதுகாப்புக்காகவும் அதிககடமைப்பட்டுள்ளோம். மேலும் ஒவ்வொருவரும் ஒரேநாட்டின் விருப்பத்திற்குரியஇலங்கையர்கள் என நினைத்து எல்லாச சந்தர்ப்பங்களிலும் நடந்துகொள்வதாகத்தெரிவிக்கின்றோம் -என்றுள்ளது. (அ)

## ஐ.நா. மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்துவதற்கும் இலங்கை அரசுக்கு அழுத்தங்கொடுக்குமாறு கூட்டமைப்பு ஆர்பரிடம் வேண்டுகோளும் விடுக்கவுள்ளது.

இதேவேளை, இதேதினம் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனும் ஆர்பரைச் சந்தித்து கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மனித உரிமை மீறல்கள் பற்றி எடுத்துக்கூறவுள்ளார்.

குறிப்பாக காணாமல் போனவர்களின் உறவினர்களில் சிலரை ஆர்பரிடம் அழைத்துச் செல்ல மனோகணேசன் முயற்சிகள் எடுத்துவருகின்றார் என்று தெரியவருகின்றது. (சி )

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பிள்ளை சின்னையா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை சின்னையா நேற்று (08.10.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வமணியின் அன்புக் கணவரும் ராஜ்குமார் (ஜேர்மனி), ரஜனி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜி(ஜேர்மனி), கருணாகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் பவிதரன், தாரணிகா, அபிராமி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக்கம்பனி கிழக்கு ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
மனைவி

## திருமதி ஞானேஸ்வரி ஞானத்திலகன் (பச்சைக்கிளி)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி ஞானத்திலகன் 07.10.2007 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நாராயணசாமி ஞானத்திலகன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான Dr.S.R. கிருஷ்ணசாமி - மகேஸ்வரியம்மாள் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாராயணசாமி-சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் செல்லத்துரை(அம்மான்) அவர்களின் பேர்த்தியும் ஜெயந்தி, நாராயணசாமி, ஜமுனா ஆகியோரின் அன்புத்தாயும் சற்குணபாலன், ராதை, இளங்கோ ஆகியோரின் மாமியும் வாகினியின் அன்புப் பேர்த்தியும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற இராசவேல், இலட்சுமிதேவி, ரூபசௌந்தரி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகானந்தன், மங்களேஸ்வரி, புவனேஸ்வரி, அருளானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.10.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (10.10.2007) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பித்து பிற்பகல் 4.30 மணியளவில் நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைற் ஹவுஸ்,
43,2/3 உருத்திரா மாவத்தை
வெள்ளவத்தை.

தகவல்:
ஞா.நாராயணசாமி (மகன்)
தொ.பே. 2507236/0773686339

## செல்வி செல்விமலர் கணேசன் (B.A.)

*(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்)*

காலஞ்சென்ற சின்னத்தம்பி கணேஷ்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் திருமதி சிவயோகமலர், திருமதி தவமலர், ராஜதுரை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் S.J.ஜெயகுமார்(சுடர் ஒளி - முன்னாள் உள்ளகக் கணக்காய்வாளர்), சு.சிவநேசன் (பொறியியலாளர் - சவூதி), பத்மாவதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணம்றுதா(ஆஸ்திரேலியா), அலங்றுதா, அவனிபாயனன், கவின்றுதா, மகிழ்றுதா ஆகியோரின் பெரியம்மாவும், றுக்மாங்கதனின் சிறியதாயும் தயாளன் (ஆஸ்திரேலியா), தேஜோமஜன்(கனடா), நேமிஷா(கனடா), அபிலாஷா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 5, நிகால் சில்வா மாவத்தை, கிருலப்பன இல்லத்தில் இன்று (09.10.2007) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று, கிருலப்பன மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.J.ஜெயகுமார்
0602181263/0714115003

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லி[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org